

புலமைச்சுடர் - 2021

அரச பரீட்சைக்கு தயாராகுவதற்கான முன்னோடி வினாத்தாள்

தரம் 5

பெயர்:.....

A- I


நேரம் : 60 நிமிடம்

பின்வரும் வினாக்களில் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

(பக்கம் 11,13,33,34,13)

1ஆம் 2ம் வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

01. செயற்கையானது - இறக்கையுள்ளது – பிரயாணத்திற்கு உதவும்.



(1)




(2)



(3)


02. முட்டையிடுவது, நீந்ததக்கூடியது, ஊர்ந்து செல்வது



(1)



(2)




(3)


03. கீழே தரப்பட்ட உருக்கோலத்தை அடிப்படையாகக கொண்டு வெற்றிடத்தில் இருக்க வேண்டிய உருவைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.




.....

1. 

2. 

3. 

04. தொடக்கத்தில் தரப்பட்ட உருவை ஒத்திராத உருவைத் தெரிவு செய்க.



1. 2. 3.

05. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத சொற்கூட்டத்தைத் தெரிவு செய்க.

1. ஓடினான் வந்தான் வாடியது வாடின

2. விழுந்த வந்தான் பழுத்த வாடியது

3. கணீர் கணீர் சல சல குடு குடு கல கல

6, 7 ஆகிய வினாக்களில் உள்ள விடுகதைகளுக்கான விடையைத் தெரிவு செய்க

06. சீருடை இல்லாத காவலாளி சம்பளம் கேட்காத காவலாளி அவன் யார்?

1. பறவை 2. மனிதன் 3. நாய்


www.ikedu.lk

07. இரண்டு கால்கள் இருப்பவனை விழாமல் பிடித்திருக்க வேண்டும். அவன் யார்?

1. மேசை 2. ஏணி 3. கதிரை


எண்கள் இடப்பட்ட கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

08.



(1) (2) (3)

09.



(1) (2) (3)

10. உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றில் மூன்று நீலநிறப் பேனைகளும் மூன்று கறுப்பு நிறப் பேனைகளும் உள்ளன. பேனைகளைப் பார்க்காமல் ஒரே நிறத்திலான இரு பேனைகளைத் தவறாமல் பெறுவதற்குப் பெட்டியிலிருந்து எடுக்கப்பட வேண்டிய பேனைகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?

1. 2 2. 3 3. 4

11. 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தின் 5ஆம் நாள் புதன்கிழமை ஆகும். அம்மாதத்தில் உள்ள ஞாயிற்றுக்கிழமைகளின் எண்ணிக்கை யாது?

1. 3 2. 4 3. 5


12. மூன்று கால் மேசையைச் சுற்றி நான்கு கால் கதிரைகள் நான்கு உள்ளன. கால்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 16 2. 19 3. 20

13. ஒரு சைக்கிள் வாங்குவதற்கு ரூ.8500.00 தேவைப்பட்டது. என்னிடம் ரூ.4800.00 இருந்தது. மீதியை இரு நண்பர்களிடமிருந்து பெற்றுக்கொண்டேன். பெற்றுக்கொண்ட பணம்

1. ரூ.2400.00 உம் ரூ.1300 உம் ஆகும்.
2. ரூ.2500.00 உம் ரூ.2300 உம் ஆகும்.
3. ரூ.5200.00 உம் ரூ.3300 உம் ஆகும்.

14. உருவில் உள்ள ஒவ்வொரு சிறிய கட்டத்தினதும் நீளமும் அகலமும் சமம், உருவிலுள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?



1. 12 2. 15 3. 17

15. கடைக்குச் சென்ற குமார் கடைக்காரனிடம் ரூ.20.00 ஐ கொடுத்து விசுக்கோத்தை வாங்கினான். கடைக்காரன் குமாரிடம் மேலும் ரூ.2.00 ஐப் பெற்று ரூ.10.00 மீதியாகக் கொடுத்தார். விசுக்கோத்தின் விலை யாது?

1. ரூ.10.00 2. ரூ.12.00 3. ரூ.14.00

www.lkedu.lk

பின்வரும் கோவையைப் பார்க்க. 2@3=3#3. இங்கு = குறியீடானது சமனைக் குறிக்கின்றது. நியமக் கணிதச் செய்கைகளுக்காக @, # என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கேற்ப

16. @ என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1. கூட்டல் 2. கழித்தல் 3. பெருக்கல்

17. # என்ற குறியீடானது எதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1. கூட்டல் 2. கழித்தல் 3. பெருக்கல்

18. நிசாத்திற்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் புதன்கிழமையும் விடுமுறை கிடைக்கும். அவரின் மனைவிக்கு ஒன்றுவிட்ட ஒரு நாள் விடுமுறை கிடைக்கும். இன்று ஞாயிற்றுக்கிழமை இருவருக்கும் விடுமுறை கிடைத்துள்ளது. இவற்றிற்கு ஏற்ப பின்வரும் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1. அடுத்த ஞாயிற்றுக்கிழமை இருவருக்கும் விடுமுறை கிடைக்கும்.
2. இன்னும் எட்டு நாட்களில் அவர்கள் இருவருக்கும் விடுமுறை கிடைக்கும்.
3. அடுத்த வியாழக்கிழமை நிசாத்தின் மனைவிக்கு மட்டும் விடுமுறை கிடைக்கும்.

19. நான்கு மனிதர்கள் ஒரே இடத்தில் இருந்து புறப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் நடந்து 16 கிலோமீற்றர் தூரம் சென்றனர். ஒரு மணித்தியாலத்தில் ஒரு மனிதன் சென்ற தூரம் யாது?

1. 1 கிலோமீற்றர் 2. 4 கிலோமீற்றர் 3. 5 கிலோமீற்றர்

20. 4m நீளமும் 4m உயரமும் உள்ள சுவருக்குப் பூச 2ℓ பூச்சு தேவைப்படுகின்றது. 8m நீளமும் 1m உயரமும் உள்ள அத்தகைய ஒரு சுவருக்குப் பூச எத்தனை லீற்றர் பூச்சு தேவைப்படும்?

1. 1ℓ 2. 2ℓ 3. 4ℓ

ரூ.453.18	ஐக் குறியீடுகளில்	R.CFD.BG	எனக் காட்டலாம் எனின்

21. ரூ.1853.34 ஐ எவ்வாறு காட்டலாம்

1. R.AEC.CD 2. R.BGFD.DC 3. R.BGFD.BG

22. R.ABCD,DF இனால காட்டப்படுவது யாது?

1. ரூ.1234.56 2. ரூ.2134.65 3. ரூ.2143.35

23. இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.

1. 3446758 3447658 2. NMWAT MNWAY 3. 3YB2RR 3YB2RR

24. ஒரு வாகனம் ஒரு லீற்றர் பெற்றோலில் 10 கிலோமீற்றர் செல்கின்றது. 10 லீற்றர் பெற்றோலை நிரப்பிக் கொண்டு பயணத்தை ஆரம்பித்த வாகனம் 60 கிலோமீற்றர் சென்றது. எஞ்சியிருக்கும் பெற்றோலில் வாகனம் எத்தனை கிலோமீற்றர் செல்லும்?

1. 60 கிலோமீற்றர் 2. 40 கிலோமீற்றர் 3. 30 கிலோமீற்றர்

www.ikdu.lk

25. ஒரு நகரத்தை இரு கட்டங்களில் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. முதல் கட்டத்திற்கு 10 மாதங்களும் இரண்டாம் கட்டத்திற்கு 15 மாதங்களும் எடுக்கின்றன. நகரத்தின் அபிவிருத்திப் பணி 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது எனின், எந்த ஆண்டில் நகரம் அபிவிருத்தி செய்து முடிக்கப்படும்?

1. 2014 2. 2013 3. 2012

26 உச்சிகளின் எண்ணிக்கை குறைந்து செல்லும் ஒழுங்கைக் காட்டுவது

A - கூம்பகம் B. சதுரமுகி C. நான்முகி

1. BAC 2. BCA 3. CAB

27. தரப்பட்டுள்ள கவிதையை ஒழுங்குபடுத்து.

A- நல்லறிவூட்டும் பாடநூலை

B- நன்கொடையாக நம்மரசளித்த

C- நன்றாய் நாமும் கற்றிடவே


D- நன்றே பேணல் நம்கடமை

1. CBAD 2. ABDC 3. CADB

28. அவந்திகா தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தாள். இதற்குக் காரணம்

1. அவந்திகா கடுமையாகப் படித்தமை
2. அவந்திகாவுக்கு வினாத்தாள் இலகுவாக இருந்தமை
3. அவந்திகா ஏனைய மாணவர்களைவிடக் கூடுதலான வினாக்களுக்குச் சரியான விடை எழுதியமை.


29. உணவுகள், மாப்பொருள் உணவு, கௌப்பி என்பவற்றைக் குறிக்கும் உருவின் கீழ் கோடிடுக.



1.



2.



3.

30. எப்போதும் உண்மையான கூற்று

1. கதிரைகள் மரத்தால் செய்யப்பட்டவை
2. மகளைவிடத் தாய் வயது கூடியவள்
3. முயன்றால் வெற்றியீட்டலாம்.

31. குமார் தனது கையில் இருக்கும் புகைப்படத்தைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான். "இப்படத்தில் இருப்பவர் எனது தந்தையின் மகளின் அண்ணா ஆவார்" எனின் குமாரின் கையில் உள்ள புகைப்படத்தில் உள்ளவர் யார்?

1. குமாரின் தந்தை 2. குமாரின் தங்கை 3. குமார்

32. 

கடிகாரத்தில் காட்டப்படும் நேரத்தை முகம்பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும்போது தோன்றும் நேரம்

1. 8.00 2. 5.00 3. 4.00

www.ikedu.lk

33. பின்வரும் பழமொழிக்குரிய கருத்தைத் தெரிவு செய்க. "காகம் திட்டி மாடு சாகாது"
    1. காகம் திட்டி எதுவும் சாவதில்லை
    2. வீண்பழிக்குப் பயப்படாதே .
    3. அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்

34. கடலில் எப்போதும் காணக்கூடியதாகவிருப்பது
    1. மீன்கள் 2. நீர் 3. கப்பல்

35. கங்கணம் என்ற சொல்லைக் குறியீட்டில் எழுதினால்

    1. △△□○□ 2. △□△○□ 3. □△△□○

36. ரிஸிகேஸ் 23 விசுக்கோத்துப் பெட்டிகளைக் கடையிலிருந்து கொண்டு வரவேண்டியிருந்தது. ஒரு தடவைக்கு 4 விசுக்கோத்துப் பெட்டிகளை மட்டுமே கொண்டு வர முடியும் எனின் 23 விசுக்கோத்துப் பெட்டிகளையும் எத்தனை தடவைகளில் கொண்டு வரமுடியும்?
    1. 8 2. 6 3. 5

37. ஒரு புகையிரதம் 50 ஆவது கிலோமீற்றர் கல்லிலிருந்து 55 ஆவது கிலோமீற்றர் கல்லைக் கடப்பதற்கு 5 நிமிடம் எடுத்தது. புகையிரதம் அதேகதியில் சென்றால் 85 ஆவது கிலோமீற்றர் கல்லைக் கடப்பதற்கு மேலும் எத்தனை நிமிடம் எடுக்கும்?
    1. 85 2. 55 3. 30

38. ஒரு கயிறு இரு சமபகுதிகளாக வெட்டப்பட்டு அவற்றில் ஒரு பகுதி மறுபடியும் நான்கு சம பகுதிகளாக வெட்டப்பட்டன. வெட்டி எடுக்கப்பட்ட ஒரு துண்டின் நீளம் 1m எனின், ஆரம்பத்தில் இருந்த கயிற்றின் நீளம் யாது?
    1. 4m 2. 6m 3, 8m

39. 750 ml கனவளவுள்ள போத்தலில் 700ml தேங்காயெண்ணெய் காணப்பட்டது. அப்போத்தலில் வெளியே சிந்தாதவாறு 100ml நீர் ஊற்றப்பட்டது. தற்போது போத்தலில் காணப்படும் தேங்காய் எண்ணெயின் கனவளவு யாது?
    1. 750ml 2. 650ml 3. 600ml

40. சுவர்ணனைக் கண்ட கடைக்காரன் பின்வருமாறு கூறினான். 6 சோடாமூடிகளைக் கொண்டு வந்து தருவாயானால் நான் 1 சோடா தருவேன் என்றான். சுவர்ணன் 36 சோடா மூடிகளைக் கொடுத்து எத்தனை சோடாப் போத்தல்களைப் பெற்றிருப்பான்?
    1. 6 2. 7 3. 8

(40 x 2.5 = 100 புள்ளி)



www.ikedu.lk



புலமைச்சுடர் - 2021

அரச பரீட்சைக்கு தயாராகுவதற்கான முன்னோடி வினாத்தாள்

தரம் 5

பெயர்:.....

A- II

நேரம் : 75 நிமிடம்

01. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

எத்தனை விதம் விதமான பழங்களை நீங்கள் எனக்குத் தந்திருக்கிறீர்கள். ஆனாலும் சுதந்திரமாகப் பறந்து திரிந்து மரங்களிலே பழுத்திருக்கும் கனிகளைக் கொத்தித் தின்பதிலுள்ள சுவை இதிலே கிடைத்திடுமா? முன்பு எல்லாம் சின்னஞ்சிறிய வயிற்றுக்கு உணவாகத் தானியங்களையும் தேடிச் செல்வேன். பரந்த வயல் வெளிகள் எமது நிறத்தைப் போலவே பசுமையாகக் காட்சியளிக்கும். கதிர் சுமந்த நெல்லினங்கள் எம்மைத் தலையசைத்து வரவேற்கும்.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

I. எம்மைத் தலையசைத்து வரவேற்பன எவை என இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது?
.....

II. விசிறியும் சுழியும் இடப்பட்டுள்ள ஒரு சொல்லைப் பந்தியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.
.....

III. இப்பந்தியில் இடம்பெற்றுள்ள ஒத்த கருத்துள்ள சொல்லை எழுதுக.
.....

IV. பின்பு என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்லை எழுதுக.
.....

V. இப்பந்தியில் இடம்றும் முன்னிலைப் பன்மைச் சொல்லை எழுதுக.
.....

VI. இப்பந்தியில் கையாளப்பட்டுள்ள உவமானத்தை எழுதுக.
..... (6 புள்ளிகள்)

02. (அ) கீழே தரப்பட்டுள்ள வாக்கங்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

I. நீ நீடுழி காலம் ..... (வாழ், வாள்)

II. ஆழம் ..... (அரியாமல், அறியாமல்) காலை விடாதே.

ஆ) கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

I. எழுபத்தைந்தாவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா .....

II. தாய், தந்தை, ஆசான், அண்ணன், அரசன் என்போர் .....

III. அகர வரிசையில் சொற்களின் கருத்தைக் கூறும் நூல்.....(5 புள்ளிகள்)

03. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

I. Don't shout please : .....

II. I want to watch a match:..... (2 புள்ளிகள்)

04. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

தயவு செய்து கதவைத் திற..... (1 புள்ளிகள்)

www.lkedu.lk

05. பின்வரும் படத்திற்குப் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

1) 

2) 

.... (2 புள்ளிகள்)

06. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

வேகமாக ஓடுங்கள்:.....(1 புள்ளி)

07. பின்வரும் வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

மட்ட மே பாடம கியலா தென்ன.....(1 புள்ளி)

08. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சரியான விடையை அடைப்புக்களிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

I. குகன் வாழ்ந்த நகரத்தின் பெயர் ..... ஆகும். (அஜோத்தி, சிருங்கிப்பேரம்)

II. பவளக்கொடி தன்னை வியப்புடன் பார்ப்பவர்கள் யாவர் எனக் கற்பனை செய்தாள்? (மாமணியும் பார்ப்பாள், பொற்கொடியும் பார்ப்பாள்)

III. நல்ல குடியில் பிறந்தவர்களுடைய இயல்பு ..... ஆகும். (வறியவராக மாறிய நிலையிலும் தம்மிடம் வந்து இரந்தவர்க்கு இல்லை என்று சொல்வார், வறியவராக மாறிய நிலையிலும் தம்மிடம் வந்து இரந்தவர்க்கு இல்லை என்று மனம் ஒப்பிச் சொல்லார்) (3 புள்ளிகள்)

9 தொடக்கம் 11 வரையுள்ள வினாக்களில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக.

09. பச்சைத் தேரை பிடில் வாசிக்க
பனைமரத்தேரை குழலூத
.....
(1 புள்ளி)

மோசங்கு கேட்குது ஞொய் ஞொய் இக்கவிதையின் மூன்றாவது வரியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

10. கீழாநோலை மேலாநோலை
எண்ணிப் பார்த்தா பதினாநோலை
கிட்டிப் புள்ளும் பரம்பரமும்
.....
இக்கவிதையின் நான்காவது வரியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக. (1 புள்ளி)

11. 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
..... என்னும் திருக்குறளைப் பூர்த்தி செய்க. (1 புள்ளி)

12. பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களில் இருக்கும் சொற்களின் கருத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

I. 'வனம் போ' என்று தந்தை சொன்னதை நான் மறுப்பது தகுமா?' **'வனம் போ'** என்பது
.....

II. குழந்தை தூங்கும் போது அதன் தாய் கண்ணாயிருந்து கவனமாகப் பார்த்துக்கொள்வாள்.
கண்ணாயிருந்து என்பது .....

III. வாங்கிய கடனை இன்று தருகிறேன். நாளை தருகிறேன் எனக் கடன்கொடுத்தவனை அலைக்கழித்தான். அலைக்கழித்தான் என்பது. ..... (3 புள்ளிகள்)

13 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களில் வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

13. அவை குஞ்சுகளுக்கு உணவு .....(ஊட்டுகின்றது / ஊட்டுகின்றன)

14. அவந்திக்கா சமையலறைக்குச் ..... (சென்றாள் / சென்றனர்)

15. பண்டைக்காலத்தில் வாழ்ந்த அரசர்கள் சிலர் குளங்களைக் கட்டுவிப்பதற்கு
..... (முயன்றது / முயன்றனர்) (3 புள்ளிகள்)

www.ikeou.lk

16. கோவிட் - 19 காலத்தில் பாடசாலைகள் காலவரையறை இன்றி மூடப்பட்டிருந்த காலப் பகுதியில் உமது கிராம முன்னேற்றக் கழகத்தின் முயற்சியால் கட்டுரைப் போட்டி ஒன்றை ஒழுங்கு செய்து போட்டியை நடாத்தினார்கள். அப்போட்டியின் முடிவு வெளியிடப்பட்டது. "கோவிட் - 19 கால கட்டுரைப் போட்டியில் செல்வன் / செல்வி ..... வென்றுள்ளார் என அறிவிக்கப்பட்டது" நீர் முதலாம் இடத்தை வென்ற மாணவன் / மாணவி ஆவீர். அவ்வேளையை நினைவில் கொண்டு மூன்று ஆக்கபூர்வமான வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தபட்சம் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். அவ்வாக்கியங்களின் எழுவாய் பயனிலைத் தொடர்புகள் சரியாக இருக்க வேண்டும்)


1. .....
   .....
2. .....
   .....
3. .....
   .....

(3x2=6 புள்ளிகள்)

தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.


17. பின்வரும் எண்ணைச் சொற்களில் எழுதுக.
    89627: ..... (2 புள்ளிகள்)
18. தரப்பட்ட எண்ணுக்கு முன்னாலும் பின்னாலும் வரும் எண்ணை உரோமன் எண்ணில் எழுதுக.
    .....XVIII ..... (2 புள்ளிகள்)
19. நான்முகி ஒன்றில் உள்ள மேற்பரப்புக்களின் எண்ணிக்கை யாது? ..... (2 புள்ளிகள்)
20. $\frac{3}{8}$ இன் சமவலுப் பின்னத்தை எழுதுக. ..... (2 புள்ளிகள்)
21. முகுந்தனின் வயது 32 வருடங்கள் ஆகும். சுதன் முகுந்தனிலும் 5 வயது மூத்தவன் ஆவான். தரணித்தின் வயது முகுந்தனின் வயதின் $\frac{3}{4}$ஆகும். எனின். மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை எத்தனை வருடங்கள் ஆகும்? ..... (2 புள்ளிகள்)
22. ரக்ஷாயன் தன்னிடமிருந்த பணத்தின் கால் பகுதியை செலவு செய்து புத்தகம் ஒன்றினை வாங்கினான். புத்தகத்தின் விலை ரூபாய் 800 எனின், ரக்ஷாயனிடம் இருந்த மொத்தப் பணம் எவ்வளவு? ..... (2 புள்ளிகள்)
23. I. எதிரே தரப்பட்டுள்ள உருவில் $\frac{1}{4}$ ஐ

    (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்தீட்டுக.



(4 புள்ளிகள்)

II. எஞ்சிய பகுதியை தசம எண்ணாக எழுதுக. .....

24. 1996 யூலை 21 ஆம் திகதி சாமந்தி பிறந்த திகதி ஆகும். எனின் 2021 யூலை 21ஆந் திகதி சாமந்தியின் வயது எத்தனை? ..... (2 புள்ளிகள்)
25. 


    உருவில் உள்ள உருளையில் இருக்கும்.

    1. முகங்களின் எண்ணிக்கை யாது? .....
    2. வளைந்த, விளிம்புகளின் எண்ணிக்கை யாது? .....

    (2 புள்ளிகள்)

www.ikedu.lk

26. கீழே உள்ள உருவில் காட்டப்பட்டுள்ள பென்சிலின் நீளம் எவ்வளவு?



..... cm.

(2 புள்ளிகள்)

27. ஒரு பிள்ளைக்கு 4 அப்பியாசக் கொப்பிகள் வீதம் 105 பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். 380 அப்பியாசக் கொப்பிகள் இருந்தன. இன்னும் எத்தனை அப்பியாசக் கொப்பிகள் தேவை?

..... (2 புள்ளிகள்)

28. விலைப் பட்டியலை அவதானித்து வினாக்களிற்கு விடை தருக.


பொருள்	அளவு	விலை
கதைப்புத்தகம்	1	90.00
பென்சில் பெட்டி	1	120.00
கலர் சோக்பெட்டி	1	180.00
வெளிக்களக் கொப்பி	1	165.00

(2 புள்ளிகள்)

வெளிக்களக் கொப்பி இரண்டும், கலர்சோக் பெட்டி ஒன்றும், கதைப்புத்தகம் இரண்டும் வாங்கிய குமரன் கடைக்காரரிடம் 500.00 ரூபாய் தாள் 2 கொடுத்தான். அவனுக்குக் கிடைத்த மீதிப்பணம் யாது? .....

29. விலைப்பட்டியலிலுள்ள எல்லாப் பொருட்களிலும் மூன்று வீதம் வாங்கத் தேவையான மொத்தப் பணம் எவ்வளவு? .....(2 புள்ளிகள்)

30.



			ஹபரனை
	மாத்தளை	தம்புள்ளை	20
கண்டி	25	60	

I. கண்டி மாத்தளையில் இருந்து தம்புள்ளைக்கான தூரம் என்ன?

II. கண்டியிலிருந்து ஹபரணைக்கான மொத்தத் தூரம் எத்தனை km களாகும்?

.....(2 புள்ளிகள்)

31 தொடக்கம் 60 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.

31. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் இரண்டாவது செயற்பாடு

1. மனவுறுதி 2. உடலைத்தளர்த்துதல் 3. மனதைத் தளர்த்துதல்

32. எமது நாட்டின் தேசிய மரத்தின் தளிரின் நிறம்

1. மஞ்சள் 2. இளஞ்சிவப்பு 3. ஊதா

33. எல்லே விளையாட்டில் ஒரு குழுவில் இருக்க வேண்டிய வீரர்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை

1. 20 2. 16 3. 12

34. பின்வரும் பிராணிகளில் ஊர்வன அல்லாதது

1. தவளை 2. உடும்பு 3. ஆமை

www.lkedu.lk

35. 

படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம் பின்வரும் எதனைச் செய்வதற்கு மிகப் பொருத்தமானது?

1. திருகு ஆணியைச் சுழற்றுவதற்கு
2. மரப்பலகையில் துளையிடுவதற்கு
3. தகட்டினை வெட்டுவதற்கு

36. புற்றை அமைக்கும் உயிரினம்

1. பாம்பு 2. தேள் 3. கறையான்

37. இலங்கையில் கடற்கரை இல்லாத ஒரு மாவட்டம்

1. காலி 2. புத்தளம் 3. அனுராதபுரம்

38. நீரின் மூலம் பரம்பலடையும் வித்து

1. ஆமணக்கு 2. கடல்மாங்காய் 3. எருக்கலை

39. தோடம்பழச்சாற்றில் அதிகம் அடங்கியுள்ள போசனைக்கூறு

1. காபோவைதரேற்று 2. கொழுப்பு 3. விற்றமின்

40. மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் இடம் எது?

1. கொழும்பு 2. களனி 3. ஜின்தோட்டை

41. இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சி

1. லக்ஷபான 2. துன்ஹிந்த 3. பம்பரகந்த

42. இப்படத்தில் இருப்பவர்.



1. கலாநிதி ரீ.பி.ஜாயா
2. கலாநிதி C.W.W. கன்னங்கரா
3. கலாநிதி ஆனந்த குமாரசாமி

43. இரவில் பூக்கும் பூக்களைக் கொண்ட தொகுதி

1. அலரி, அநதிமந்தாரை 2. கடுபுல், பவளமல்லிகை 3. பவளமல்லிகை, தாமரை

44. இருகாந்தத் துண்டுகளின் ஒத்த முனைகளை அருகே பிடிக்கும் போது

1. ஒன்றை ஒன்று தள்ளும் 2. ஒன்றை ஒன்று கவரும் 3. தள்ளும் அல்லது கவரும்

45. உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவு அல்லாதது

1. மீன் 2. இறைச்சி 3. சோறு

46. மூடாமல் சமைக்க வேண்டிய உணவுப் பொருள்


1. வற்றாளை 2. மரவள்ளி 3. தக்காளி

47. பின்வருவனவற்றுள் முலையூட்டிப் பிராணி எது?

1. ஆந்தை 2. ஆமை 3. வௌவால்

48. படத்தில் A குறிக்கும் எழுத்து யாது?

1. கறுப்புத்தாள்
2. வெள்ளைத் தாள்
3. சிவப்புத்தாள்



www.ikedu.lk

49. மின்குமிழ் **ஒளிராத** சுற்றினைக் காட்டும் வரிப்படம் எது?


(1)


(2)


(3)

50. உறுதியற்ற சதுப்புநிலச் சூழலில் வளரும் கண்டல் தாவரங்கள் அசைவின்றி தம்மை நிலைப்படுத்துவதற்கு அவை கொண்டுள்ள விசேட வேர்க்கட்டமைப்பு எது?
1. மூச்சு வேர் 2. மிண்டிவேர் 3. தொங்குவேர்

51. ஒருவர் வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெறச் செல்ல வேண்டியது.
1. பிரதேச செயலாளரிடம் 2. சமுர்த்தி அலுவரிடம் 3. கிராம அலுவலரிடம்

52. தேசிய மரபுரிமையாகவும் உலக மரபுரிமையாகவும் கணிப்புப் பெற்றுள்ள இலங்கையின் இயற்கை இடங்களில் ஒன்று.
1. சிகிரியா 2. பொலன்னறுவை புராதன நகர் 3. சிங்கராஜவனம்

53. கட்டித்தொங்க விடப்பட்ட காந்தம் ஓய்வு நிலையில் நிற்கும் போது அருகே கொண்டு செல்லப்பட்ட பொருளைத் தள்ளியது எனின் அருகே கொண்டு செல்லப்பட்டது?
1. காந்தம் 2. செப்புக்கம்பி 3. இரும்புக்கம்பி

54. தண்டுத்துண்டம் மூலம் புதிய பயிர் பெறத்தக்கது
1. கத்தரி 2. பீற்றூட் 3. கங்குன்

55. செவிகளின் ஏடான மாத்திரம் தகவல் பெற்றுக்கொள்ள உதவுவது
1. பத்திரிகை 2. தொலைக்காட்சி 3. ஒலிபெருக்கி

56. தேசப்படமொன்றில் உயர்ந்த நிலப்பகுதியைக் காட்டப் பயன்படும் நிறம்
1. கபிலம் 2. சிவப்பு 3. பச்சை

57. உடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்கும் உணவு
1. பயறு 2. பசளி 3. கருவாடு

58. அல்பனா ஆக்கம் என்பது
1. நீர்ச்சாயம் பயன்படுத்திச் செய்யப்படுவது
2. கோடுகளை மேலும் கீழும் வரைந்து செய்யப்படுவது
3. வித்துக்களைப் பயன்படுததிச் செய்யப்படுவது

59. டெங்கு நோயைப் பரப்புவது
1. கியூலெக்ஸ் 2. அனோபிலிஸ் 3. ஈடிஸ்

60. நெற்பயிருக்குத் தீங்கு விளைவிக்காத பிராணி
1. அந்துப்பூச்சி 2. சந்துகுத்தி 3. லேடிபெட்வண்டு (30 புள்ளிகள்)

(எழுத்து உறுப்புக்கு 2 புள்ளிகள்)

www.lkedu.lk